**மாதிரி வினாத்தாள்**

மனித உடல் உறுப்பு மண்டலங்களின் அமைப்பும் செயல்பாடுகளும் - பகுதி I

10th Standard

**அறிவியல்**

Reg.No. : | | | | | | |

I.அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
II.நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும்.
III.வினா எண்17- ற்கு கண்டிப்பாக விடையளிக்கவும்.

Time : 01:15:00 Hrs | Total Marks : 35

## பகுதி - அ

10 x 1 = 10

1) ஒற்றை முனை நியூரான்கள் காணப்படும் இடம் ......................................
(a) மூளை (b) தண்டுவடம் (c) வளர்கரு நரம்புத் திசு (d) முதிர்ந்த நரம்புத் திசு

2) உணர் உறுப்புகளில் அடங்கியுள்ளவை ......................
(a) ஒற்றை முனை நியூரான்கள் (b) இருமுனை நியூரான்கள் (c) பலமுனை நியூரான்கள்
(d) மெடுல்லேட்டட் நியூரான்கள் (மயலினுறை நியூரான்கள்)

3) நமது உடலின் மனவெழுச்சி வெளிப்பாட்டைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதி ................................
(a) சிறுமூளை (b) பெருமூளை (c) தலாமஸ் (d) ஹைபோதலாமஸ்

4) மூளைத்தண்டின் ஒரு பகுதியாக அமைந்துள்ளது .............................
(a) முன்மூளை மற்றும் நடு மூளை (b) நடு மற்றும் பின் மூளை (c) முன் மற்றும் பின் மூளை (d) முன் மூளை மற்றும் தண்டு வடம்

5) தண்டுவட நரம்புகள் என்பவை ..........................
(a) உணர்ச்சி நரம்புகள் (b) இயக்கு நரம்புகள் (c) கலப்பு நரம்புகள் (d) மூளையோடு பின்னிப் பிணைந்துள்ளவை

6) கழுத்துப் பகுதியில் காணப்படும் ஒரு நாளமில்லாச் சுரப்பி ...................
(a) அட்ரீனல் சுரப்பி (b) பிட்யூட்டரிச் சுரப்பி (c) தைராய்டு சுரப்பி (d) கணையம்

7) எக்சோகிரைன், எண்டோகிரைனாக செயலாற்றும் நாளமில்லாச் சுரப்பி .....................
(a) கணையம் (b) பிட்யூட்டரி (c) தைராய்டு (d) அட்ரீனல்

8) ஒரு டெசி.லி. இரத்தத்தில் காணப்படும் இயல்பான இரத்தச் சர்க்கரையின் அளவு ..................
(a) 80 - 100 மி.கி/ டெசி.லி. (b) 80 - 120 மி.கி/ டெசி.லி. (c) 80 -150 மி.கி/ டெசி.லி. (d) 70- 120 மி.கி/ டெசி.லி.


9) நோய்த்தொற்றுதலை எதிர்க்கும் T லிம்போசைட்கள் ............................. உறுப்பில் மாறுபாடு அடைகின்றன.
(a) பாராதைராய்டு சுரப்பி (b) நிணநீர்ச் சுரப்பி (c) தைமஸ் சுரப்பி (d) அட்ரீனல் சுரப்பி

10) மியாஸிஸ்-1இல் ஒத்திசைவான குரோமோசோம்கள் ஜோடியுறுதல் நிலை ......................................
(a) லெப்டோடீன் (b) சைகோடீன் (c) பாக்கிடீன் (d) டிப்ளோடீன்

## பகுதி - ஆ

5 x 2 = 10

11) கீழுள்ள படத்தை வரைந்து, கொடுக்கப்பட்டுள்ளவற்றில் இரண்டு பாகங்களைக் குறிக்கவும்.




(செல் உடலம், ஆக்ஸான், டெண்டிரான், கிளைத்த முடிவுப் பகுதிகள்)

12) கீழே கொடுக்கப்பட்டுள்ள மனித மூளையில் பின்வரும் செயல்களைக் கட்டுப்படுத்தும் பகுதிகளை முறையே அ, ஆ எனக் குறிக்க.
அ) நுகர்தல் உணரும் பகுதி ஆ) பார்வை உணரும் பகுதி




13) கீழே உள்ள படத்தை வரைந்து கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின் உதவியால் பாகங்களைக் குறிக்க.



அ) இது சிறுநீரகத்தின் மீதுஅமைந்துள்ள சுரப்பி ஆ) இது சுரக்கும் ஹார்மோன்கள் ஆல்டோஸ்டீரோன் மற்றும் கார்டிஸோன் ஆகும்

14) கீழே கொடுக்கப்பட்டுள்ள நியூரான்களின் வகைகளை வரைந்து இனம் காண்க.



15) கீழே கொடுக்கப்பட்டுள்ள மியாசிஸ் செல் பிரிதல் பற்றிய வாக்கியங்களில் சரி மற்றும் தவறு என குறிப்பிடுக அ) இது உடற்செல்களில் நிகழ்கிறது ஆ) மியாசிஸ் குன்றல் பகுப்பு எனவும் அழைக்கப்படுகிறது. இ) ஒத்திசைவான குரோமோசோம்கள் இணைவது குறுக்கே கலத்தல் எனப்படுகிறது. ஈ) மியாசிஸ் வேறுபாடுகளைத் தோற்றுவிக்கிறது. அதுவே பரிணாமத்திற்கு மூலப்பொருள்களாக அமைகின்றன.

## பகுதி - இ

3 x 5 = 15

16) கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களை வைத்து பத்தியை பூர்த்தி செய்க. (மண்டையோடு, முள்ளெலும்புத் தொடர்,பையாமேட்டர், அரக்னாய்டு உறை, மூளை, தண்டுவடம், மூளை உறைகள், டியூராமேட்டர்) மைய நரம்பு மண்டலத்தைச் சுற்றியுள்ள மூன்று பாதுகாப்பு உறைகள் ஒட்டு மொத்தமாக ............ என்று அழைக்கப்படுகின்றன. ................. மற்றும் .................க்கு அடியில் அமைந்துள்ள வெளிப்புற இரட்டைக் கடின உறை ................. என அழைக்கப்படுகிறது. மெல்லியதும், இரத்த நாளங்களைப் பெற்றதுமான நாடு உறைக்கு ............... என்று பெயர். மூளையையும் தண்டுவடத்தையும் சுற்றி நெருக்கமாக அமைந்துள்ள உட்புற மெல்லிய உறைக்கு ................. என்று பெயர்.

17) a) கொடுக்கப்பட்டுள்ள பாகங்களை அதன் பணியுடன் பொருத்துக. முகுளம், சிறுமூளை, முன்மூளை, தலாமஸ், பெருமூளைப்புறணி, பின்மூளை, பான்ஸ், ஹைபோதலாமஸ். அ) உறக்க மையம் மற்றும் சுவாச மையம். ஆ) இதயத்துடிப்பு இரத்தக் குழல்களின் சுருக்கம், மூச்சுவிடுதல் போன்ற செயல்களை ஒழுங்குபடுத்தும் பலவேறு அனிச்சைச் செயல்களின் மையம். இ) பெருமூளை, தலாமஸ் மற்றும் ஹைப்போதலாமஸ் கொண்டது. ஈ) இயக்க மற்றும் உணர்பகுதிகள். உ) உணர்வு மற்றும் இயக்கு உணர்வலைகளைக் கடத்தும் முக்கிய பணியைச் செய்கிறது. ஊ) பாலுறவு நடத்தையை ஒழுங்குபடுத்தல். எ) பான்ஸ், சிறுமூளை, மற்றும் முகுளம் ஆகியவற்றை உள்ளடக்கியது. ஏ) நடத்தல், ஓடுதல், போன்ற இயக்குதசைகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துகிறது.

**(OR)**

b) கீழே கொடுக்கப்பட்டுள்ள மனித மூளையில் பின்வரும் செயல்களைக் கட்டுப்படுத்தும் பகுதிகளை முறையே அ, ஆ, இ, ஈ எனக் குறிக்க. அ) மூளையின் எப்பகுதி உணர்வு , அறிவுக்கூர்மை நினைவாற்றால், கற்பனைத்திறன் காரணகாரியம் ஆய்ந்தறிதல் முதலியவற்றின் இருப்பிடமாகத் திகழ்கிறது. ஆ) மூளையின் எப்பகுதி இயக்கு தசைகளின் இயக்கங்களை ஒழுங்குபடுத்துகிறது. இ) மூளையின் எப்பகுதி உறக்கம் மற்றும் சுவாசத்திற்கானவை. ஈ) மூளையின் எப்பகுதி இதயத்துடிப்பு, இரத்தக்குழல்களின் சுருக்கம், மூச்சுவிடுதல் போன்ற செயல்களை ஓழுங்குபடுத்தும் பல்வேறு அனிச்சை செயல்களின் மையமாகும்.



*******************************************